7th July 1962]

பாரம் வரை படித்திருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. இப்போது மூன்ருவது பாரம் வரை படித்திருந்தால் போதும் என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் அடிக்கடி மாற்றம் இல்லாமல் நிச்சயமாக இன்னின்ன தகுதி இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : Old Form IV or New standard VIII.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—PRIVILEGE MATTER REGARDING A NEWS ITEM IN THE 'MALAI MURASU'.

MR. SPEAKER : The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of a privilege matter. He can speak on it.

SRI M. KALYANASUNDARAM : Mr. Speaker, Sir, with your permission I wish to raise the following matter of breach of privilege committed by a Tamil Daily known as "Malai Murasu".

Enclosed is a copy of 'Malai Murasu'—which I have in my hands—dated 6—7—1962 which came to my hands yesterday evening. I have to invite your attention to a news item featured in the front page with a three-column head-line stating : சட்டசபையில் சாராயம் குடிப்பவர்களா . . .

MR. SPEAKER : "குடிப்பவர்களா"?

SRI M. KALYANASUNDARAM : ஆம், "குடிப்பவர்களா"? என்றிருக்கிறது.

This news item is about a supplementary question put by the hon. Member, Sri Cheemaichamy during Qusetion-Time regarding liquor permits. This supplementary was disallowed by the Hon. Speaker holding it to be out of order.

இதற்கிடையில் எனது நண்பர் திரு. சசிவர்ணத்தேவர் அவர்கள் இந்தப் பேப்பரின் வால்போஸ்டரில் "சட்டசபையில் சாராயம்" என்று போட்டிருந்தது என்றும் அதில் கேள்விக் குறியோ அல்லது ஆச்சரியக் குறியோ ஒன்றும் இல்லே என்றும் சொல்லுகிருர். நான் சொல்லவில்லே.

A question, which has been held out of order should not be published, as it amounts to expunging from the proceedings. A matter that has not gone into the proceedings cannot be part of the proceedings. So if that is published, it is a distortion of the proceedings. A misrepresentation of the proceedings of the House definitely amounts to contempt of this House.

[Sri M. Kalyanasundaram] [7th July 1962

Further there is a sub-heading for the news item stating "சட்டசபையில் கம கம" containing an insinuation calculated to bring the House and its hon. Members to disrespect in the eyes of the people.

It should not be misunderstood that I am trying to interfere with the freedom of the Press, to comment on the proceedings of this House. Certainly the Press has a right—in fact it is its duty—to comment on the proceedings of the House because we are not infallible. But it would not do credit to the Press to malign the House and pull down its prestige. It is an insult to the people who have brought this House into existence. Such an irresponsible Press is a menace to the society and for the healthy development of democracy. I, therefore, request you. Sir, to kindly permit me to move that the matter be referred to the Committee of Privileges.

இந்தத் தீர்மானத்தில் இரண்டு காரணங்களை நான் குறிப்பிட்டிருக்கிறேன். தாங்களும் இந்தப் பத்திரிகையைப் பார்த்திருப்பீர்கள், கனம் அங்கத்தினர்களும் பார்த்திருப்பார்கள். இந்தச் சபையிலுள்ள அங்கத்தினர்களின் மனதை அதில் பிரசுரிக்கப்பட்டுள்ள இந்த விஷயம் எந்த அளவுக்குப் புண்படுத்தும் என்பதை கட்சி வித்தியாசம் இல்லாமல் எல்லா அங்கத்தினர்களும் உணருவார்கள் என்று நம்புகிறேன். ஆகவே நான் கூறுவதைக் கட்சி வித்தியாசம் இல்லாமல் எல்லா அங்கத்தினர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். சாதாரணமாக பத்திரிகை மீது உரிமைப் பிரச்னை கொண்டு வருவது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமல்ல. எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் அது மகிழ்ச்சிக்குரிய விஷயமல்ல. கனம் அமைச்சர்கள் மீது உரிமைப்பிரச்னை கொண்டு வருவது என்பது உற்சாகமான விஷயம்தான். அது அரசியல் வாதிகளுக்கு இடையே இருக்கக்கூடிய சண்டை. பத்திரிகை தர்மம் என்பது மிகவும் போற்றக் கூடிய விஷயம். அதிலும் தமிழ்நாடு பத்திரிகை தர்மத்திற்கு, மிகவும் புகழ் பெற்றது. அப்பேர்ப்பட்ட தமிழ் நாட்டில் தமிழிலேயே வெளியிடப்பட்டு வரும் ஒரு பத்திரிகை இந்தச் சபையினுடைய கௌரவத்தை மட்டரகமாகச் சித்தரிக்கக் கூடிய வகையில் நடவடிக்கைச் செய்திகளைத் திரித்துப் பிரசுரித்திருப்பதானது மிகவும் அபாயகரமானது. இதை எப்படியாவது தடுத்தாகவேண்டும் என்கிற நோக்கத்தோடும், இந்தச் சபையினுடைய கௌரவம் காப்பாற்றப்பட வேண்டும் என்கிற நோக்கத்தோடும்தான் இந்தப் பிரச்னையை நான் இங்கு கொண்டு வர நேர்ந்தது. இதன் மீது தாங்கள் பரிசீலனை செய்து அதற்குரிய தீர்ப்பளித்து இந்தப் பிரச்னையைக் கொண்டுவர அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

Mr. SPEAKER : The matter will be taken up on Monday.

Sri M. KALYANASUNDARAM : Sir, on Monday I may not be here. So, I request that this matter may be taken up when I am present here.

7th July 1962]

MR. SPEAKER : On Tuesday?

SRI M. KALYANASUNDARAM : Yes, Sir.

MR. SPEAKER : Very well.

III. ELECTION TO THE BOARD OF INDUSTRIES.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I beg to move—

' That in order to represent the Madras Legislative Assembly on the Board of Industries, this Assembly, in accordance with section 3 (1) (b) of the Madras State Aid to Industries Act, 1922 (Madras Act V of 1923) and rule XXII (2) of the Madras Small Scale and Cottage Industries Loans and Subsidy Rules, 1956, do proceed on a date to be fixed by the Speaker to elect two representatives on the Board of Industries constitued under the Act '.

திரு. மீ. கல்யாணசுந்தரம்: இந்தத் தீர்மானத்தின்மீது இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். வோட்டுக்கு விடுவதற்கு முன்பாக அதன்மீது அங்கத்தினர்கள் பேசுவதற்கு உரிமை உண்டு . .

MR. SPEAKER : Yes, the hon. Member may speak on the motion which is before the House for discussion.

திரு. மீ. கல்யாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் சில யோசனைகளையும் கவனிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தீர்மானம் அரசாங்கம் தொழிலாளர்களுக்கு உதவி செய்யும் சட்டத்தின் கீழ் ஓர் ஆலோசனை போர்டை (ஸ்டேட் இன்டஸ்ட்ரீஸ் போர்ட்) அமைத்திருக்கிறது. அந்த போர்டுக்கு நம்முடைய சபையின் சார்பாக இரண்டு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்ப சட்டப்படி நமக்கு உரிமையிருக்கிறது. இந்தச் சட்டம் இயற்றப்பட்டு விதிகள் பிறப்பிக்கப்பட்டது எல்லாம் இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன்னதாக. அப்போது தொழில் வளர்ச்சிக்கு இருந்த கண்ணோட்டம் வேறு, இப்போது தொழில் வளர்ச்சியில் இருக்கின்ற கண்ணோட்டம் வேறு. இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் குடிசை கைத்தொழில்கள், கிராம கைத்தொழில்கள் இவைகளுக்கு எல்லாம் ஊக்கம் கொடுத்து, அவைகள் வளர வேண்டும் என்பது. சிறு உற்பத்தியாளர்கள் பெரும் உற்பத்தியாளர்களோடு போட்டி போடாமல், தப்பிப் பிழைக்க உதவி செய்யக்கூடிய வகையிலும் இந்த போர்ட் உதவிக் கொண்டிருக்கிறது. தனிப்பட்ட பெருந்தொழில்கள் வளர்ச்சியடைந்திருந்தாலுங்கூட, சிறு உற்பத்தியாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டியது நம்முடைய கடமையாகும். இந்த அரசாங்கத்தினுடைய கடமையாகும். அந்த நோக்கத்துடன் இந்த போர்ட் நடக்க வேண்டும் என்பது என் ஆலோசனை. ஆனால் இப்போது இந்த போர்டிற்கு இந்தச் சபையிலிருந்து இரண்டு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுத்தாலுங்கூட, நடைமுறையில் பார்த்தால் அவர்கள் பூராக் காலமும் அங்கத்தினர்களாக இயங்க முடிவதில்லை. காரணம் இந்தப் புது சபை தோன்றியது அல்லது